நகர ஊரமைப்பு துணை இயக்குனர், நாகப்பட்டினம் (ம) மயிலாடுதுறை மாவட்டம், அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு. ரா.கிருஷ்ணமூர்த்தி பி.இ.,

---

நடவடிக்கைகடிதம் எண்: 04/2020 நாமா 3 நாள்:05.08.2020

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்- நாகப்பட்டினம் (ம) மயிலாடுதுறை மாவட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம் - சீர்காழி வட்டம் - கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் -மாதானம் ஊராட்சி(ம)கிராமம்- நி.அ.எண்கள்:46,47-ல் 192137.40 ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
2. அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிக்காட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2நாள்: 30.10.2017, 31.10.17, 07.11.17,17.11.17 மற்றும் 20.12.17
4. அரசாணை எண்: 21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்: 05.02.2019
5. அரசாணை எண்: 100, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்: 01.07.2019
6. மனுதாரர் திரு.A.வரலெட்சுமி அவர்களின் கடிதம் நாள்: 28.05.2018
7. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்: 01.06.2020
8. வட்டார வளர்ச்சி அலுவலர், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், , அவர்களின் கடிதம் ந.க.எண்: 2032/2020/ஆ1 நாள்: 28.07.2020

---

உத்தரவு:-

பார்வை (1) மற்றும் (2)ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (6)ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலணை செய்யப்பட்டு அதன் தொடர்நடவடிக்கையாக பார்வை (5)ல் கண்ட அரசாணையின் படி சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடு வரைபடம் தயார் செய்யப்பட்டு, பார்வை (7)ல் கண்ட இவ்வலுவலக கடிதம் வாயிலாக சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடம் அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை (8)ல் கண்டுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடிதம் வாயிலாக சாலை மற்றும் பூங்கா பகுதி ஏற்பு செய்து அதன் விபரம் பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து, கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டம் - சீர்காழி வட்டம் - கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் -மாதானம் ஊராட்சி(ம)கிராமம்- நி.அ.எண்கள்:46,47 ல் 192137.40 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(நா.மா)எண்: 01/2020** என எண்ணிடப்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு: 192137.40ச.அடி

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை: 12

விற்கப்பட்ட மனை எண்கள்: 16,17,20,23,24,33-35,37,38,56,57

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை: 59

விற்கப்படாத மனைகளின் எண்கள்: 1-15,18,19,21,22,25-32,36,39-45, 47-55, 58-72

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு: 124924.00.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு: 12492.40ச.அடி (10.27%)

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:

1) பரிசீலணைக் கட்டணம்:

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்குரு.500/- வீதம் பரிசீலணைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | Registration Slip No. DTCP/L/0277924/2017-ல் மனை எண்கள்: 1-15,18,19,21,22,25-32,36,39-55,58-80 ஆகிய மனைகளுக்கு மட்டும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலணைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , நாகப்பட்டினம் (ம) மயிலாடுதுறை மாவட்டம் அவர்களின் அரசு வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்: **(உதாரணமாக)**

கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் மனைகளை வரன்முறை கோரி 04.11.2018 முதல் பெறப்படும் விண்ணப்பத்திற்கு பார்வை (4)ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு வரன்முறைக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 30/- வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 25/-வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| **44** | **167.22** | **167.22 X 30 = ரு.5016.60/-** | **167.22 X 25 = ரு.4180.50/-** |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| **0217 Urban Development**<br>**60 Other Urban Development Schemes**<br>**800 Other Receipts**<br>**AT Receipts under Regularisation Charges of Unapproved Layouts and Plots –DTCP 27 Non Taxation Fees - 30 Regularisation (DPC: 0217 60 800 AT 2730)** | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழக்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் விபரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேறகாணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு, உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. அரசாணை (நிலை)எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017-ல் விதி எண்:7(g)(ii)-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல எனஅறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கையளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல்நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

5/8/2020

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
நாகப்பட்டினம் (ம) மயிலாடுதுறை மாவட்டம்

<u>இணைப்பு:</u>
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

5/8/20

<u>பெறுநர்:</u>
வட்டார வளர்ச்சி அலுவலர்,
கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம்,
நாகப்பட்டினம் மாவட்டம

<u>நகல்:</u>

1. திருமதி.A.வரலெட்சுமி,
நெ.7, மனோரஞ்சிதம் தெரு,
கட்டபொம்மன் தெரு
ஜமீன் பல்லாவரம்
சென்னை- 117.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
மாவட்ட ஆட்சியரகம்,
நாகப்பட்டிணம் மாவட்டம்.
3. உதவி இயக்குநர்,
நில அளவை பதிவேடு துறை,
மாவட்ட ஆட்சியரகம்,
நாகப்பட்டிணம் மாவட்டம்.
4. வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மயிலாடுதுறை வட்டம், (சீர்காழி)
நாகப்பட்டிணம் மாவட்டம்.

(3, 4) சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)

5. சார்பதிவாளர் அலுவலகம்,
கொள்ளிடம் ,
நாகப்பட்டிணம் மாவட்டம்.

(5) சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)

6. தொழில்நுட்ப வைப்பறை — ஒரு வரைபட தொகுப்பு

**கொள்ளிடம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.மு ஜான்சன்**

ந.க.எண்:2032/2020/ஆ1 நாள்:20.08.2020

**பொருள்:** அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், - தஞ்சமாவூர் மண்டலம் - நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம் - கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் - மாதானம் ஊராட்சி நி.அ.எண்கள்:46,47-ல் 192137.40 ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டது - விற்கப்படாத 59 மனைகளை 10445.18 ச.மீ மனைப்பரப்புகளை உள்ளாட்சியின் மூலம் வரன்முறை செய்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

**பார்வை:** 1.அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD4(3)/நாள் :04.05.2017
2. அரசாணை எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD4(3) நாள் :13.10.2017 .
3. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறைகள் ந.க.எண்.13193/2017/3/நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017,17.11.2017 மற்றும் 20.12.2017,
4. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள் நடவடிக்கை கடிதம் எண்.04/2020/நா.மா நாள்:05.08.2020

--------

**உத்தரவு:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், மாதானம் ஊராட்சி நி.அ.எண்கள்: 46,47-ல் 192137.40 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை(1) மற்றும் பார்வை(2)இல் காணும் அரசாணைக்கிணங்க பார்வை(4)இல் காணும் கடிதத்தின்படி கொ.ஒ.ம.வ/ந.ஊது.இ(நா.மா) எண்.01/2020 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் விற்கப்படாத 59 எண்ணிக்கை மனைகளுக்கு (மனை எண்:1-15,18,19,21,22,25--32,36,39--45,47--55,58--72) மனுதாரர் திருமதி.A.வரலெட்சுமி, நெ.7, மனோரஞ்சிதம் தெரு, கட்டபொம்மன் நகர், ஜமின் பல்லாவரம், சென்னை -7 என்பவரால் கீழ்காணும் விபரப்படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

**2.பரிசீலனைக் கட்டணம்:**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | மனை எண்:1-15,18,19,21,22,25--32,36,39--45, 47--55,58--72)-க்கு மட்டும் இணைய தளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. |

மேலும் விற்கப்படாத மனைகள். 59-க்கும் 10445.18 ச.மீ வரன்முறைக்கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் கீழ்காணும் விவரப்படி அரசுத் தலைப்பு மற்றும் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

**வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் கீழ்காணும் விவரம்:**

| கட்டண விபரம் | தலைப்பு விபரம் | மனைப்பிரிவின் விபரம் மற்றும் புல எண் | தொகை ரூ. | ரசீது எண் / நாள் |
|---|---|---|---|---|
| வரன்முறைக் கட்டணம் (சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம்) | அரசுத் தலைப்பு 021760800AT2730 | 10445.18 ச.மீ | 313356/- | சார்நிலை கருவூலம் சீர்காழி நாள்:18.08.2020 |
| வளர்ச்சிக் கட்டணம் (சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம்) | The District Collector Nagapattinam | | 261130/- | PNB puthur வங்கி வரைவு எண்:576438 நாள:18.08.2020 |

எனவே கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் மூலை, முடக்கு மற்றும் பூங்காப் பகுதியினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிற்கு ஆவண எண்.649/2020-இன்படி பத்திரப்பதிவு செய்யப்பட்டதனைத் தொடர்ந்தும், தஞ்சாவூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டதனைத் தொடர்ந்தும் மாதானம் ஊராட்சியில் உள்ளாட்சியின் மூலம் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டதனைத் தொடர்ந்தும், மாதானம் ஊராட்சி நி.அ.எண்கள்:46,47-ல் 10445.18ச.மீ குடியிருப்பு மனைப்பிரிவுகளை உள்ளாட்சியின் மூலம் வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண் 134ந.நி(ம)கு.வ(எம்.ஏ.I) துறை நாள்:20.09.2002-ன் படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு, நில உரிமைக்கு, மனுதாரரால் வழங்கப்பட்ட நில உரிமை சான்றிதழ்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, மேற்காணும் மனைகளை மட்டும் உள்ளாட்சியின் மூலம் வரன்முறைபடுத்தி ஒப்புதல் வழங்கப்படுகிறது,
2. இம்மனைபிரிவிற்கு நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்ற வட்டாட்சியரின் சான்றிதழின் பேரில் மேற்காணும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகின்றது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மனுதாரரால் சமர்பிக்கப்பட்டவை, சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ, அல்லது மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி வட்டார வளர்ச்சி அலுவலரால் ரத்து செய்யப்படும்.
4. மனைகளின் எல்லைகளை ஒட்டி செல்லும் வாய்க்கால்களை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது. மேலும், வாய்க்கால்களினால், மனைபிரிவிற்கு பாதிப்பு ஏற்படாதவாறு தடுப்பு சுவர் கட்டப்படவேண்டும்.
5. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக உயர்அழுத்த மற்றும் தாழ்வு அழுத்த மின் வழித்தடப் பாதைக்கு இடையூறு ஏற்படக்கூடாது.
6. மனைப்பிரிவின் அருகில் அணுகு சாலை 3.6 மீட்டர் அகலம் இருக்க வேண்டும்.

**வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)**
**கொள்ளிடம்**

20/8/20

**பெறுதல்**

திருமதி.A.வரலெட்சுமி, நெ.7, மனோரஞ்சிதம் தெரு,
கட்டபொம்மன் நகர்,
ஜமின் பல்லாவரம், சென்னை -7

நகல்:மாவட்ட ஆட்சித்தலைவர்/ஊராட்சிகளின் ஆய்வாளர், உதவிஇயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலகம், நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
நகல்: நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
நகல்: சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கொள்ளிடம், நாகப்பட்டினம் மாவட்டம்
நகல் : வட்டாட்சியர், சீர்காழி